பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 07 செவ்வாய்க்கிழமை (21-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 55

# சென்னையில் இருந்து புறப்பட்ட கப்பலில் ஏற 200 அகதிகள் மறுப்பு

## நெடுந்தீவுக்கு நேற்று 117 பேர் 'குமண'வில் புறப்பட்டனர்

வடமராட்சி, ஜன. 21

குடாநாட்டில் தங்கியிருந்த நெடுந்தீவைச் சேர்ந்த 117 பேர் நேற்று முற்பகல் 11-30 மணியளவில் 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறையில் இருந்து தமது சொந்த இடத்துக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

நெடுந்தீவு இராணுவ முற்றுகைக்கு உள்ளாகுமுன்னர் இவர்கள், யாழ்ப்பாணம் வந்திருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள், பெண்கள் உட்பட்ட இந்த 117 பேருடன் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளும் சென்றுள்ளனர்.

இதேவேளை நெடுந்தீவில் இருந்து யாழ். வர விருப்பம் தெரிவித்துள்ள சுமார் 25 பேர் இன்று அதே கப்பல் மூலம் இங்கு அழைத்து வரப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ-5-165-111]

## மாவையில் ஷெல் தாக்குதல்! தந்தை, மகன் காயம்!!

யாழ்ப்பாணம், ஜன. 21

மாவிட்டபுரத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெவ் தாக்குதல்களை நடத்தினர். இதில் தந்தையும் மகனும் காயமடைந்தனர்.

சாயோலைப் பகுதியைச் சேர்ந்த கந்தப்பிள்ளை முருகையா (52வயது), ஆனந்தசிவம் [16வயது] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதே சமயம்—

அச்சுவேலி, கதிரிப்பாய், தம்பாலை, இடைக்காடு, ஈவினைப் பகுதிகளிலும் நேற்று முன்தினம் பகல்பலாலி ஷெல்கள் விழுந்து வெடித்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

### பர்ரிய பீரங்கிப் படகுகளைத் திருத்த

## சீன இராணுவக் குழுவினர் திருமலைக்கு வந்துள்ளனர்

யாழ்ப்பாணம், ஜன. 21

சீன இராணுவத்தைச் சேர்ந்த பொறியியலாளர் குழுவினர் திருகோணமலைக்கு தற்சமயம் வந்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனாவினால் ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்பட்ட பாரிய பீரங்கிப் படகுகள் மூன்றை உடனடியாகத் திருத்தி முடிக்கவே இவர்கள் இங்கு வந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

15 கோடி ரூபா பெறுமதியான இந்த மூன்று படகுகளும் கடந்த 1989ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டவை என்றும் —

தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்கென சர்வதேச நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட நிதியில் இருந்தே இவை பெறப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் சீனாவிடம் இருந்து மேலும் புதிய பீரங்கிப் படகுகளை வாங்கவும் ஸ்ரீலங்கா அரசு முயற்சி எடுத்து வருவதாகவும் அறிய வருகிறது.

இதனிடையில் —

தற்சமயம் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் ஏழு சீனப் பீரங்கிப் படகுகள், தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ]

### பொருளாதார நெருக்கடி குறைந்தால்

## அடுத்த வருடத்திலிருந்து மாணவருக்கு இலவச சீருடை

### ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

கொழும்பு, ஜன. 21

அடுத்த வருடத்தில் [1993இல்] மாணவர்களுக்கு இலவச சீருடைகளும் வழங்கப்படலாம். பொருளாதார நெருக்கடி குறையும் பட்சத்தில் அது சாத்தியமாகும்.

— இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா, இவ்வாண்டுக்கான இலவச பாடப்புத்தக விநியோகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் அறிவித்தார்.

இந்த வைபவம் பொலன்னறுவை மாவட்டத்தில் பக்கமூன மகாசேன் மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

ஜனாதிபதி தமது பேச்சில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பில்லை என்று கூறி கடைசி நேரத்தில் ஆட்சேபம்

சென்னை, ஜனவரி 21

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்ப சம்மதம் தெரிவித்திருந்த ஈழத் தமிழ் அகதிகளில் சுமார் இருநூறு பேர் நேற்று அகதிகள் கப்பல் சென்னையிலிருந்து புறப்பட்டபோது அதில் ஏற மறுத்துவிட்டனர்.

இலங்கைக்குத் திரும்பக்கூடியதாக — அங்கு பாதுகாப்பான சூழ்நிலை — ஏற்படவில்லை என்று தெரிவித்தே அவர்கள் இறுதி நேரத்தில் தாயகம் திரும்பும் தமது முடிவை மாற்றிக்கொண்டனர்.

சென்னையிலிருந்து புறப்பட்ட ''அக்பர்'' கப்பலில் முதலில் சுமார் 800 ஈழத் தமிழ் அகதிகள் பயணம் செய்வதாக இருந்தது.

ஆனால் அவர்களில் 200 பேர் வரை கடைசி நேரத்தில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சென்னையிலிருந்து நேற்று 614 ஈழ அகதிகள் புறப்பாடு

சென்னை, ஜன. 21

197 குடும்பங்களைச் சேர்ந்த 614 ஈழத் தமிழர்கள் நேற்று பிற்பகல் ''எம். வி. அக்பர்'' கப்பல் மூலம் சென்னைத் துறைமுகத்தில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டனர்.

தமிழகத்தில் உள்ள சுமார் 2 லட்சம் ஈழத் தமிழ் அகதிகளில் சுமார் 30 ஆயிரம் பேர் தாயகம் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும்—

அவர்களில் சுமார் 3 ஆயிரம் பேர் திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் ஸ்ரீலங்கா—இந்திய அரசுகளின் சார்பில் கூறப்படுகிறது.

அவர்களில் 614 பேரே முதல் தொகுதியாக நேற்றுக் கப்பலில் புறப்பட்டனர்.

எஞ்சியவர்கள் ஐந்து குழுக்களாக அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இம் மாதம் 27 ஆம் திகதி இரண்டாவது குழு சென்னையிலிருந்து திருமலை நோக்கிப் புறப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## இந்திய அதிகாரிகளும் ஈழ அகதிகளுடன் வருகை

கொழும்பு, ஜன. 21

தமிழகத்திலிருந்து தமது தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளுடன் இந்திய அரசு அதிகாரிகள் குழு ஒன்றும் திருகோணமலை வருகிறது.

திருமலை வரும் இலங்கைத் தமிழ் அகதிகளை வரவேற்பதற்கும், அவர்களை தங்க வைத்து அனுசரிப்பதற்கும், இலங்கையில் செய்யப்படும் ஏற்பாடுகளை நேரில் கண்டறிவதில் இந்திய மத்திய மற்றும் தமிழக மாநில அரசுகளின் அதிகாரிகள் குழு ஈடுபடும் என்று அறிவிக்கப்படுகிறது. [த-எ]

## 30 கொமாண்டோக்களும் அகதிகளின் கப்பலில்!

சென்னை, ஜன. 21

சென்னையிலிருந்து 'அக்பர்' கப்பலில் புறப்பட்ட ஈழத் தமிழ் அகதிகளுக்கு பாதுகாப்பாக அந்தக் கப்பலில் இந்தியப் படையைச் சேர்ந்த விசேட கொமாண்டோக்கள் 30 பேரும் வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம்—

அகதிகளை ஏற்றி வரும் கப்பலுக்கு உதவியாக 'கங்கா தேவி' என்ற இந்தியக் கடற்படை ரோந்துக் கப்பலும் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (உ-எ-5)

## இந்திய - ஸ்ரீலங்கா அதிகாரிகளுக்கு ஏமாற்றம்!

லண்டன், ஜன. 21

முதலில் தாயகம் திரும்ப சம்மதம் தெரிவித்தவர்களில் கால்வாசிப்பேர் இறுதி நேரத்தின் தமது மனதை மாற்றிக் கொண்டமை அகதிகளை திருப்பி அனுப்பும் வேலையில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா—இந்திய அதிகாரிகளுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது. பி. பி. ஸி. இவ்வாறு கருத்து வெளியிட்டது.

இதற்கிடையில் —

திருகோணமலை சேரும் அகதிகள் முதல் மூன்று நாட்க

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சிலாவத்துறையில் குண்டு வீச்சு!

கொழும்பு, ஜன. 21

முல்லைத்தீவு மாவட்டம்—சிலாவத்துறையில் நேற்று ஸ்ரீலங்கா விமானப் படையின் போர் விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டன என்று கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் அறிவித்தது. ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை. [உ-எ]

## கிழக்கில் கண்ணிவெடி! 6 பொலீஸார் படுகாயம்!!

### நீதிபதி மயிரிழையில் தப்பினார்!!!

கொழும்பு, ஜன. 21

மட்டக்களப்பு மாவட்டம் கிரான்குளத்தில் இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் ஆறு பொலீஸார் படுகாயமடைந்தனர். மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. பி. சுவர்ணராஜ் தெய்வாதீனமாக சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர்தப்பினார்.

நீதிபதி பயணம் செய்த காருக்கும், அந்தக் காருக்கு பாதுகாப்பாகச் சென்ற பொலீஸாரின் வாகனத்துக்குமிடையே கண்ணி வெடி வெடித்தது என்றும்—

அப்போது நீதிபதியின் கார் சேதமடைந்தது என்றும்—

பொலீஸாரின் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சென்று மரம் ஒன்றுடன் மோதியதில் பொலீஸார் பலர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ-5]

## தமிழர் தாயகம், தன்னாட்சி; அங்கீகரிக்கும் தீர்வு தேவை!

### லோறன்ஸ் திலகர் வலியுறுத்து

ரோம், ஜன. 21

''தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர்களது தாயகமும் தன்னாட்சி உரிமையும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதன் அடிப்படையிலேயே ஒரு தீர்வுத் திட்டம் வகுக்கப்பட வேண்டியது அவசியம்''.

விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரிவைச் சேர்ந்த மூத்த உறுப்பினரான திரு.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தீவுப்பகுதி மாணவர்களுக்கு காலை வேளை வகுப்புகள்!

யாழ்ப்பாணம், ஜன. 21

தீவகப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் காலை நேரத்தில் பாடசாலைகளில் கல்வி பயில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மேற்படி மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள சில பாடசாலைகளில் மாலை வேளையில் வகுப்புகள் இடம்பெற்று வந்தன.

இந்த மாணவர்களுக்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

### ஆஸ்பத்திரி மலசல கழிவு விடயம்:

## உரிய நிதி ஒதுக்கியும் நடவடிக்கை ஏதும் இல்லை!

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ்ப்பாண நகரின் சுகாதாரத்துக்கும், சுற்றாடலுக்கும் கேடு விளைவித்து வரும் யாழ். ஆஸ்பத்திரி மலசல கழிவுகளை வெளியேற்றும் முறையை மாற்றி அமைப்பதற்கு இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மலசல கழிவுகளை ஆஸ்பத்திரிக்கு அருகில் தேங்கவிடாது கடலுக்குள் செலுத்துவதற்கான இயந்திரம் வாங்குவதற்குப் பணம் ஒதுக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கட்டடத் திணைக்களப் பொறியியலாளரை அனுப்புமாறு அவசர கோரிக்கை விடப்பட்டுச் சுமார் ஒரு மாதமாகியும் இன்னும் எவரும் கொழும்பு செல்லவில்லை!

யாழ். ஆஸ்பத்திரி மலசல கழிவுகள் ஆஸ்பத்திரிக்கு அருகிலேயே திறந்த வாய்க்கால்களில் விடப்படுவதால் விளையும் சுகாதாரக் கேடு குறித்து சுட்டிக் காட்டப்பட்டதை

(4ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப...... கழிவு அகற்றிற விசயத்தை உவை கவனிக்காம கழிச்சு விட்டினம் போலை...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


**தேவை**

வீட்டுத் தளபாடங்கள், மெத்தைகள், பஞ்சு, தும்பு, ஸ்பொன்ஜ் வகைகள், மெத்தை Box ஸ்பிறிங்குகள் அனைத்தும் நியாயமான மதிப்பீட்டில் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு; எல்லாநாட்களிலும் 8 மணி— 4 மணி வரையும். புதிய இல. 234, K.K.S. வீதி. யாழ்ப்பாணம். [வைத்திலிங்கம் & Co. அருகாமையில்] [19385]

**தவறிவிட்டது**

யாழ். ஆஸ்பத்திரி கிளினிக் காட், இரவல் புத்தகம் ஆகியவை சிறுபையுடன் 17-1-92 அன்று பெரியகடைக்கும், திருநெல்வேலி சிவன்கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். சி. சதாசிவம்பிள்ளை 71, சிவபதி, மணல்த்தறை, திருநெல்வேலி. [19412]

**வகுப்புகள்**

சங்கீதம், வீணை, வயலின் சங்கீத சபை பரீட்சைகளுக்கும், ஜி. சீ. ஈ. O/L. A/L வகுப்புகளுக்கும் கொட்டடியிலும், நல்லூரிலும் கற்பிக்கப்படும். ஆர்வம் உடையவர்கள் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் காலை 9—12 மணிக்குள் தொடர்பு கொள்க. 33, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (19409)

**அச்சு வேலைகள்**

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

**மாணவர் அகராதி**

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்கு கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதர் மாணவர் அகராதி' ரூபா 95/-. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். [சி-1409]

**A/L கணக்கியல் புத்தகம்**

கணக்கியல் கொள்கைகளும், கணக்கீட்டு நியமங்களும் ஆசிரியர் பா. பாலச்சந்திரன், விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம். பக்கங்கள் 165. விலை 65 ரூபா. கிடைக்குமிடங்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, மண்டேலா ரேடர்ஸ், அறிவகம். [19020]

**புத்தகம் கட்டுதல்**

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

**விஞ்ஞான பாடத்திட்டம்**

விஞ்ஞான பாடத்திட்டம் ஆண்டு 6-11 வரை. ஆண்டு, தவணை, பாட ரீதியாக விற்பனைக்குண்டு. இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/1406]

**வாணி**
கல்வி நிறுவனம்
வடலியடைப்பு.
**SPOKEN ENGLISH**
With
**GRAMMAR**
by
*Mr. BRITTO*
வியாழன், வெள்ளி 4 மணி

**ஆண்டு-11,10,9**
**விஞ்ஞானம்**
★ J.R. சூரி ★
[19417]

**SPECIAL ENGLISH**

யாழ். பல்கலைக்கழக
முதலாண்டு கலை, வர்த்தக
வெளிவாரி மாணவர்களுக்குரிய
**ஆங்கில மொழி போதனை**
விரிவான, துரித கற்கை நெறி
ஆசிரியர்: **த. ந. பஞ்சாட்சரம்**
தொடர்பு கொள்க:
நிர்வாகி,
சயன்ஸ் அக்கடமி,
யாழ்ப்பாணம்.
[சி-1408]


## 16ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**அரியபுத்திரன் இசைக்கியம்மா**

எம் வாழ்வுக்கு ஒளிவிளக்காய் நின்று, அன்புடன் வழிகாட்டி, பண்புடன் வாழவைத்த தெய்வம் 06-01-1992 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டிமார்கள், கொப்பாட்டன்மார்கள்.

நா. ஆனந்தன்,
8/2, பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம். [19402]

## ஆயுத விற்பனைத் தடை: பாதிப்பை ஏற்படுத்தாதாம்

கொழும்பு, ஜன. 21

பிரிட்டனின் ஆயுத விற்பனைத் தடையால் இலங்கை பாதிப்படையவில்லை.

இலங்கை தனக்கு தேவையான ஆயுதங்களை வேறு இடங்களிலிருந்து பெறுகின்றது.

இதனால் பிரிட்டனின் தடை காரணமாக இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

இப்படி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா செய்தியாளர் மாநாட்டில் கூறினார். [இ-எ[


**தரமான கோழித்தீன்**

பல்வேறு தானியங்கள் மற்றும் கனிப் பொருள்கள் சேர்க்கப்பட்டு, உரிய முறையில் தயாரிக்கப்பட்ட கோழித்தீன் சகல '' கற்பகம் '' விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

**விலை:** கிலோ ரூபா 23/– மட்டுமே.
(மொத்தக் கொள்வனவிற்கு விசேட கழிவு வழங்கப்படும்).

தொடர்பு: பனை அபிவிருத்திச் சபை,
சந்தைப்படுத்தும் பகுதி,
53, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.
(சி-1407)

புதிய பிரிவு
**கணக்கியல்**
திரு. S, K. பிரபாகரன்
A/L 93: செவ்வாய் - வியாழன்; 3 — 4
A/L 92: செவ்வாய் - வியாழன்; 4 — 5
**யூனிவேர்சல்**
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
[சி/1349]


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம்: 17—01—1979
வீர மரணம்: 08—12—1991
திதி: 21—01—1992

**வீரவேங்கை**
**இன்பராஜ் (இன்பம்)**
**(தங்கராசா - ஜெயசீலன்)**

கரணவாய் கிராமத்தின் எழில் ஜெயசீலன்
அரியமலர் ஈன்றெடுத்த தங்கராசா இன்பராஜ்
பன்னிரண்டு வயதினில் கண்ணிரண்டாய் ஈழம் வேண்டி
பயிற்சியும் பெற்று, உயர்ச்சியும் பெற்றான்
வழிமேலே விழிவைத்து காத்திருந்தோம் நாமன்று
விழியதுவோ கலங்கிட மாவீரனாக வந்தான்.

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

கரணவாய் மேற்கு,
அந்திரான்.
[19382]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 06 — 03 — 1922
உதிர்வு: 22 — 12 — 1991

அமரர்
**நாகலிங்கம் சிவயோகம்**

தித்திக்க அமுதூட்டி தாலாட்டி
புத்திக்கு வித்தாக நல் அறிவூட்டி
சித்திக்கு இறை வேண்டி நாம் வாழ
பக்திக்கு வித்தாகி பரமனடி சேர்ந்தாய் அம்மா!

ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இரத்தினகிரி,
கொக்குவில் மேற்கு.
அரசடி.
[5012]

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

மண்மகிழ பிறப்பு: 03 — 04 — 1966

கண்கலங்க இறப்பு: 21 — 01 — 1991



**பத்மினி அஞ்சலா சூசைப்பிள்ளை**

அன்பு மகளே! தண்ணீர் விபத்து மரணத்தின் மூலம் உமது உடல் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உம் நினைவானது எம் வாழ்நாள் மட்டும் நீங்காது.

இவரின் ஆத்ம சாந்திக்காக இன்று (21-01-1992) காலை 6 மணிக்கு யாழ். புனித யுவானியார் தேவாலயத்தில் துக்கப் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
தாய், சகோதர, சகோதரர்கள்,
அத்தான்மார்.

இல. 14, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். [19413]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அர்த்தமுள்ள மதியுரை

இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். மக்களுக்கும், நாட்டுக்கும் நாசத்தை விளைவிக்கும் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். தமிழர்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்ற எண்ணம் சிங்களப் பொது மக்கள் மத்தியில் முகிழ்த்து வருவது குறித்து இப்பத்தியில் நேற்றுக் குறிப்பிட்டிருந்தோம்.

தங்களைத் தேசியவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் தீவிரவாதப் போக்குடைய சிங்களப் பேரினவாதிகளும், அவர்களுக்குப் பக்கத்துணையாக இருக்கும் பௌத்த மகாசங்கத்தினரும் தமிழர்களின் உரிமைகளை வழங்காது, அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவே தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இதே வேளை—

இனப்பிரச்சினை சம்பந்தமாக, வாசுதேவ நாணயக்கார போன்ற இரண்டொருவரைத் தவிர ஏனைய அரசியல் தலைவர்கள் இன்னமும் நியாயமான, துணிச்சலான கருத்துக்களை முன்வைக்கவில்லை.

பேரினவாதத்தை மீறித் தாம் நியாயமான கருத்துக்களைத் தெரிவிக்கலாமா என்ற அச்சம் தெற்கு அரசியல்வாதிகளுக்கு இருக்கவே செய்யும். கடந்த 44 வருடங்களாக அதன் ஆதரவோடும், அரவணைப்போடும் வளர்ந்தவர்களே அரசியல்வாதிகள்.

தெற்கின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தொண்டமான் யோசனைகள் குறித்து ஒளிந்து, மறைந்து விளையாடுவதும், மௌனம் சாதிப்பதும் மேற்கூறிய அச்சத்தினாலேயே! இவர்களே பேரினவாதிகளைத் தூண்டிவிட்டு, நல்ல பிள்ளைகளாக மௌனம் சாதிக்கும் சாத்தியமும் இல்லாமல் இல்லை!

எவ்வாறெனினும் தெற்கில் ஓர் அரசியல் மயக்க நிலையும், கலங்கல் தன்மையும் தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதாவது மக்கள் அரசியல் தலைவர்கள் பக்கமா அல்லது அரசியல் தலைவர்கள் மக்களின் பக்கமா என்ற தெளிவற்ற நிலை தோன்றியிருக்கிறது எனலாம்!

இத்தகைய சூழ்நிலையில், கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் சேர்ந்து விடுத்த அறிக்கை வரவேற்கப்பட வேண்டியதாகும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யுத்தத்திற்கு மாற்று வழியாக அரசியல் தீர்வே காணப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் தீர்வின் செல்லுபடியாகும் தன்மையை நிராகரிப்பது சகல சமூகத்தினருக்கும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று சிங்களப் பேரினவாதிகளை எச்சரித்துள்ளார்கள்.

சகல இனங்களினதும் சனநாயக அரசியல் அபிலாசைகளுக்குச் சட்டபூர்வ உரிமை வழங்குவதற்குத் தேசியத் தலைவர்கள் தொடர்ந்தும் மறுத்து வந்தால் நாடு பிரதேசவாரியாகச் சிதறுண்டு போகும் என்று தெற்கின் அரசியல் தலைவர்களையும் எச்சரித்திருக்கிறார்கள். இது விடயத்தில் சோவியத் யூனியன், யூகோஸ்லேவியா ஆகியவற்றில் நடந்தவை ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்றும் இடித்துரைத்துள்ளார்கள்.

இவர்களைப் போலவே தெற்கில் உள்ள ஏனைய புத்திஜீவிகளும், பேரினவாதிகளுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் அர்த்தமுள்ள மதியுரை செய்தால் அங்குள்ள மக்களின் பக்கத்துக்கு அரசியல் தலைவர்கள் முற்றாகச் சார்ந்து செயற்பட வழி பிறக்கும்.

## திருநிலைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 21

அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்செல்வன் சவிரிப்பிள்ளை எட்மன்ட் றெஜினோல்ட் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவார். [த]

## சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 21

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் சகலருக்குமான நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவும், கழிக்கப்பட்ட 10 சத வீத சம்பளக் கொடுப்பனவும் இன்று செவ்வாய்க்கிழமை முதல் தற்காலிக காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

## உரிய நிதி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அடுத்து—

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவும், அரச அதிபரும் எடுத்த தீவிர முயற்சியின் பயனாக—

மலசல கழிவுகளை கடலில் சேர்ப்பதற்கான இயந்திராதிகளைக் கொள்வனவு செய்ய சுகாதார அமைச்சினால் 57 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

உரிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பொறியியலாளர் ஒருவரைக் கொழும்புக்கு அனுப்புமாறு யாழ். அரச அதிபர் அங்கு தங்கியிருந்த வேளை [கடந்த வருடம் டிசம்பர் 26 ஆம் திகதி] யாழ். கட்டடத் திணைக்களத்துக்கு அவசரச் செய்தி அனுப்பி இருந்தார் என அறியவருகிறது.

ஆனால் இது வரை பொறியியலாளர் எவரும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. ஒதுக்கிய நிதியும் கொழும்பில் அமைச்சில் கிடந்து உறைகிறது. அந்தப் பணத்தை அவசர தேவை கருதி வேறு இடங்களுக்குப் பயன்படுத்தும் ஆபத்தும் உருவாகலாம்!

[அ-3]

## இந்திய..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் உப்புவெளியில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் தங்க வைக்கப்படுவர் என்றும்—

புனர்வாழ்வு வேலைகள் முடிவடைந்த பின்னர் வீடுகளுக்கு செல்ல அவர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். [உ-5]

## அடுத்த..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்கு அரசியல் சுதந்திரத்தை வழங்கி இலவசக் கல்வித் திட்டத்தை மேலும் அர்த்தபுஷ்டியுள்ளதாக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

சுதந்திர தார்மீக சமுதாயம் ஒன்றை உருவாக்கவும் நாம் எண்ணியுள்ளோம்.

அரசியல் லாபம் கருதி அக்கறையுள்ள அரசியல் கட்சிகளினால் 1956 இல் மொழிப் பிரச்சினை உருவாக்கப்பட்டது. அதற்கு முந்திய காலத்தில் வடக்கு-கிழக்கு மாணவர்கள் சிங்கள மொழியைப் படித்து வந்தனர்.

அவர்களது பாடவிதானத்தில் சிங்களமும் ஒரு பாடமாக இருந்தது. அக்காலத்தில் இருந்த தமிழ் எம். பிக்கள், தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் படிப்பிக்க சிங்கள ஆசிரியர்களை அனுப்பி வைக்கும்படி வற்புறுத்தி வந்தனர். தெற்கின் அரசியல்வாதிகளாலேயே இந்த நிலைமை மாறியது. — என்று [illegible]

[அ-எ]

## றோட்டறக்ட் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜன. 21

சூழல் சுகாதார வாரத்தை முன்னிட்டு யாழ். நகர மத்தி றோட்டறக்ட் கழகத்தினர். யாழ். மாநகர சபையின் அனுசரணையுடன் அம்மன் வீதியில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (இ)

## எய்ட்ஸ் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 21

''எய்ட்ஸ்'' நோய் சம்பந்தமான சுகாதாரக் கருத்தரங்கு இன்று செவ்வாய் மாலை 3-00 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கை தீவக கூட்டுறவு ஒன்றியமும், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவும் ஒன்றிணைந்து ஒழுங்கு செய்துள்ளன. [இ-18]

## தீவுப்பகுதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொட்டடி நமசிவாயவித்தியாலயம், பாரதி பாஷா வித்தியாலயம், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், பெரியபுலம் மகாவித்தியாலயம், சென். ஜோன்ஸ் அக்கடமி, கொக்குவில் நாமகள் வித்தியாலயம், இந்து மகளிர் கல்லூரி விடுதி ஆகியவற்றில் இன்றுமுதல் காலை வேளையில் கல்வி போதிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம்—

இடம்பெயர்ந்து யாழ். நகரில் வசிக்கும் — புங்குடுதீவு கொத்தணியைச் சேர்ந்த — ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரையான வகுப்பு மாணவர்கள் யாழ். கில்னர் ஒழுங்கையில் உள்ள சட்டித் தெரு மெதடிஸ் மிஷன் த. க. பாடசாலையிலும் கல்வி பயிலலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## தமிழர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லோறன்ஸ் திலகர் இத்தாலியில் இடம்பெற்ற சர்வதேசக் கருத்தரங்கு ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் இத்தாலியின் பால்மரோ நகரில் இந்த சர்வதேசக் கருத்தரங்கு நடைபெற்றது.

''தமிழ் மக்கள் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கிறார்கள். சிங்கள மக்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்களது பண்பாடு, பாரம்பரியத்தை அங்கீகரிக்கிறார்கள்.

சிங்கள தேசமும் தமிழ்த் தேசமும் பரஸ்பர நல்லுறவுடன் அமைதியாக இருப்பதையே தமிழீழ மக்கள் விரும்புகிறார்கள்'' என்றும் திரு. திலகர் அந்தக் கருத்தரங்கில் மேலும் கூறினார்.

## சென்னையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனதை மாற்றிக் கொண்டு விட்டனர் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

வடக்கு, கிழக்கில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதால், தாங்கள் திரும்பிச் செல்லக்கூடியதான சூழ்நிலை அங்கு ஏற்படவில்லை என்றும்—

தாயகம் திரும்பினாலும் அங்கு அகதி முகாம்களிலேயே தங்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் மனம் மாறிய அகதிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியாவிலிருந்து திருப்பி அழைப்பதில் இலங்கை அரசு தீவிரம் காட்டுவதாகவும்—

அதன் மூலம் இலங்கையில் சகஜநிலை ஏற்பட்டிருப்பதாக உதவும் நாடுகளுக்குக் காட்ட முடியும் என்று கொழும்பு அரசு நம்புவதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

[உ-எ-5]

## மன்னாரில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 21

மன்னார் மாவட்டத்தில் பொங்கல் திருநாளை விடுதலைப் புலிகளும் மக்களும் இணைந்து பெரிய விழாவாகக் கொண்டாடினர்.

இந்த விழாவில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அமுதனும் விழாவில் பங்குபற்றினார். [ஒ]

## தமிழ் அகதிகள் மர்ம மறைவு

யாழ்ப்பாணம், ஜன. 21

திருகோணமலை, கிண்ணியாவில் தமிழ் அகதிகள் பலர் மர்மமான முறையில் காணாமற் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20 நாட்களில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இவ்வாறு காணமற் போயுள்ளனர் என்றும்—

காணமற் போனவர்கள் பற்றி எதுவித தகவலும் இன்னமும் கிடைக்கவில்லை என்றும்—

இந்த விடயம் குறித்து அரசுக்கு மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அறியவருகிறது. [ஒ]

## ஆசிரிய நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு ஐந்நூறு ரூபா சம்பளத்தில் தற்காலிக ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

விண்ணப்பித்தவர்கள் அன்றைய தினம் காலை 9 மணிக்கு தத்தமது பகுதி கொத்தணி முதன்மைப் பாடசாலைகளில் தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்பு, கல்விச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஒ-5]

## மண்டைதீவுக் கடலில் இரு மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 21

மண்டைதீவுக் கடற்பரப்பில் கடந்த வெள்ளியன்று இரவு மீன் பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்களைப் படையினர் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாவாந்துறையைச் சேர்ந்த கறுப்பையா சுப்பையா [40 வயது], அந்தோனிப்பிள்ளை அன்ரனி யோசேப்பு (42 வயது) ஆகியோரே கைதான இருவரும் ஆவர்.

இவர்களை உடனடியாக விடுவிக்கக் கோரி நாவாந்துறை சென். நீக்கிலஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவிடமும் யாழ். அரச அதிபரிடமும் மகஜர்களைச் சமர்ப்பித்தனர்.

கடந்த சில நாட்களில் மட்டும் குடாநாட்டு கடல் நீரேரிப் பகுதிகளில் 20 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## வவுனியாவில் தமிழர் மீது தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 21

பிற மாவட்டங்களில் இருந்து வவுனியாப் பகுதிக்குச் செல்லும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களில் இவ்வாறான தாக்குதல்களில் இராணுவத்தினரும் சமூக விரோதக் குழுக்களைச் சேர்ந்தோரும் ஈடுபட்டு வருகின்றனர் என்றும்—

இதனால் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர்கள் சிலர் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. [ஒ]

## 15 சோவியத் குடியரசுகளிடம் அணு ஆயுதங்கள் தாராளம்

மாஸ்கோ, ஜன. 21

சோவியத் யூனியனின் மறைவை அடுத்து புதிதாக உருவாகியுள்ள 15 சுதந்திர நாடுகளும் அணு ஆயுதங்களை வைத்துள்ளன.

புதிய நாடுகளும் அவை வைத்துள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கையும் 1990 இன் கணக்கெடுப்பின்படி, பின்வருமாறு:-

★ ரஷ்யா - 19 ஆயிரம்
★ உக்ரைன் - 4 ஆயிரம்
★ கஸகிஸ்தான் - 1,800
★ பைலோரஷ்யா - 1,250
★ லித்துவேனியா - 325
★ ஜோர்ஜியா - 320
★ அஸர்பைஜான் - 300
★ எஸ்தோனியா - 270
★ ஆர்மேனியா - 200
★ லத்வியா - 185
★ துருக்மெனிஸ்தான் - 125
★ உஸ்பெக்கிஸ்தான் - 105
★ மொல்டேவியா - 90
★ தாட்ஜிக்கிஸ்தான் - 75
★ கேர்கியா - 75

போல்ரிக் குடியரசுகளான லித்துவேனியா, எஸ்தோனியா, லத்வியா மற்றும் ஜோர்ஜியா ஆகிய குடியரசு நாடுகளைத்தவிர ஏனைய 11 குடியரசுகளும் சேர்ந்து புதிய கொமன்வெல்த் அமைப்பை உருவாக்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. [இ-எ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உப்பள ஊழியர் கொடுப்பனவு

வடபிராந்திய உப்பளங்களைச் சேர்ந்த நிரந்தர ஊழியர்களுக்கான சம்பள முற்பண கொடுப்பனவு [1991 ஆம் ஆண்டுக்குரிய) எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்பட இருக்கிறது.

வியாழன் — பளை உப அலுவலகத்திலும் வெள்ளி — முரசுமோட்டை உப அலுவலகத்திலும் சம்பள முற்பணத்தை பெற்றுக்கொள்ளலாம். இந்தக் கொடுப்பனவைப் பெறவரும் அனைவரும் தத்தமது வங்கிக் கணக்குப் புத்தகங்களை எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நிதி முகாமையாளரின் பணிப்பின்படி வங்கிக் கணக்கு இல்லாதோருக்கு முற்பணம் வழங்கப்படமாட்டாது எனப் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். [ஒ]

# கால்களை இழந்த தமிழருக்கு செயற்கைக் கால் வசதியில்லை

## கொழும்பில் தயாராவது முழுக்க படையினருக்கு

தமிழ்ப் பகுதிகளில் குண்டு வீச்சினாலும் மற்றும் ஷெல் தாக்குதல்களினாலும் தமது கால்களை இழந்த பொதுமக்களுக்கு, இந்தியாவிலிருந்து ஜெய்ப்பூர் செயற்கைப் பாதங்கள் வந்து சேர்ந்தால் மட்டுமே நடப்பதற்கு மாற்று வசதி கிடைக்கும்.

இல்லையேல் வானத் தாக்குதல்களால், குறிப்பாகத் தமது பாதங்களை இழந்தவர்கள் நடக்க வசதியின்றி அவதிப்பட நேரிடப்போகிறது.

யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலை ஒன்று உள்ளது. ஆனால் செயற்கைக் கால்களைத் தயாரிப்பதற்குத் தேவையான பாதங்கள் கொழும்பிலிருந்து அல்லது இந்தியாவில் இருந்தே வரவேண்டும்.

1990 ஜூன் மாதம் யுத்தம் தொடங்குவதற்கு முன்னர் யாழ். தொழிற்சாலைக்கு கொழும்பிலிருந்தே செயற்கைப் பாதங்கள் தருவிக்கப்பட்டன. கொழும்பிலும் நாளொன்றுக்கு எட்டுப் பாதங்களை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும்.

ஆனால் இப்போது கொழும்பில் தயாரிக்கப்படும் பாதங்கள் முழுவதும் இராணுவத்தினருக்கே வழங்கப்படுகின்றன. அவையும் போதாதாம்.

இந்நிலையில், தமிழ்ப் பகுதிகளுக்குத் தேவையான ஜெய்ப்பூர் பாதங்களை இந்தியாவில் ஜெய்ப்பூர் நிறுவனத்திடமிருந்தே பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை ஜெய்ப்பூர் பாதத்தைப் பயன்படுத்தி செயற்கைக் கால்களைச் செய்வதற்குத் தேவையான அலுமினியம், தோல் வகைகள் மற்றும் உபகரணங்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பொருள்கள் விரைவில் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் என்று யாழ். ஜெய்ப்பூர் தொழிற்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-5]

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் வேலுப்பிள்ளை

[இளைப்பாறிய ஆசிரியர்]

அராலி வடக்கை சேர்ந்த நாகலிங்கம் வேலுப்பிள்ளை [மயிலு வாத்தியார்] 20-01-92 நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ் சென்ற வேலுப்பிள்ளை செல்லம்மாவின் அன்புக் கணவரும், கிருஸ்ணமலர், பத்மசோதி, ஸ்ரீகுகன் [லங்கா சீமெந்து நிறுவனம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் [புகையிரத திணைக்களம்], பரமகுல தேவராசா [சவூதி], பனிவளர் சோதி ஆகியோரின் அன்பு மாமனாரும், சண்முகநாதனின் [சித்த ஆயுள் வேத ஹோமியோபதி வைத்தியர், கட்டுடை] அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [21-01-92] காலை பத்து மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
வே. ஸ்ரீதகன் [மகன்]

அராலி, வடக்கு.
[19421]

### ஆறுமுகம் தனபாலசிங்கம் [தனபாலு]

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் குளங்கரை லேனில் வசித்தவருமாகிய ஆறுமுகம் தனபாலசிங்கம் [தனபாலு- தொலைத் தொடர்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்] 20-1-1992 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - முத்தம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், கமலத்தின் பெறாமகனும், யோகாம்பிகையின் அன்புக் கணவரும், மாலா, செல்வக்குமார், பிறேமா, வசந்தகுமார், சுரேஷ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சதாசிவதேவா [சின்னராசா], வேலாயுதம்பிள்ளை, செல்வராசா, றஞ்சன் [பிரான்ஸ்], சரோஜினிதேவி, கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகம்மா, கோவிந்தபிள்ளை, விசாலாட்சி, பொன்னுத்துரை, செல்வம்மா, நல்லதம்பி [சுவிஸ்], சிவக்கொழுந்து, சிதம்பரம் [ஜேர்மனி], நடராசா, வரலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சசிகலாவின் மாமனாரும், சுவாங்கியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-1-1992 காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்:
த. யோகாம்பிகை

குளங்கரை லேன்,
கொக்குவில் கிழக்கு. (19422)

### பொ. தாமோதரம்பிள்ளை

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த பொ. தாமோதரம்பிள்ளை காலமானார்.

இவர் தெய்வேந்திரம்மாளின் அன்புக்கணவரும், பாலசுப்பிரமணியத்தின் [ஆசிரியர், உரும்பராய் ம.ம.வி.] தகப்பனாரும், கமலினியின் [ஆசிரியை, ஊரெழு கணேச வித்தியாசாலை] மாமனாரும், கஜானன், கஜனினி ஆகியோரின் பேரனுமாவார்.

இவரது தகனக்கிரியை இன்று [21-1-92] நண்பகல் 11 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தா. பாலசுப்பிரமணியம்

புன்னாலைக்கட்டுவன். (19423)

# மண்ணுக்கு போராளி காப்பரண்; போராளிக்கு பனை காப்பரண்

## நூல் வெளியீட்டில் யோகி உரை

மானிப்பாய், ஜன. 21

எமது மண்ணுக்கு காப்பரணாக போராளிகளும், போராளிகளின் காப்பரணாக பனைகளும் விளங்குகின்றன. எதையுமே எதிர்பாராமல் போராடும் போராளிகளையும், பயன்தரும் பனைகளையும் மக்கள் புரிந்து கொள்ளாத மனநிலையில் உள்ளனர். இந்த மண்ணில் பனை மதிக்கப்பட வேண்டியதொரு சொத்து.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ''காப்பரண்'' முத்திங்கள் இதழை வெளியிட்டு வைத்து உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ரி. சபாரத்தினம் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது. முதல் பிரதியை மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா பெற்றுக் கொண்டார்.

திரு. யோகி தொடர்ந்து பேசுகையில்,

''பனை ஒரு சமூகத்துக்கு மட்டும் சொந்தமானது என்ற எண்ணம் நம்மிடையே மறைந்து, தமிழ இனம் முழுவதற்கும் பனை சொந்தமானது என்ற உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும். குறுகிய நோக்கத்துடன் அல்லாது பனையை தேசிய நோக்கோடு பார்க்க வேண்டும்.

அறிவியலை வளர்க்கும் நோக்குடன் மட்டுமல்லாது பிறரை கவரக்கூடிய கவர்ச்சிப் பொருளாகவும் பனையை நாம் வளர்க்க வேண்டும். அழகான முறையில் வளர்க்கப்பட்ட பனந்தோப்பு வெளிநாட்டவரைக் கவரும். அதன் மூலம் எமக்கு வருமானமும் கிடைக்கும். எமது மண்ணுக்கே சொந்தமான பனையில் இருந்து உற்பத்தியாகும் பொருள்களுக்கு தூய தமிழ் சொற்களையே பயன்படுத்த வேண்டும்.

எமது பூமி தன்னிறைவோடு திகழ வேண்டும். எமது மண்ணின் வளத்தை பூரணமாக பயன்படுத்த வேண்டும் என்பதில் நாம் அக்கறையுடையவர்களாக இருக்கிறோம் — என்றார்.

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினரால் வெளியிடப்பட்ட இந்த இதழுக்கு பலர் வாழ்த்துரை வழங்கினர். [இ-90]

## கூட்டம்

ப. நோ. கூ. சங்கத் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை [புதன்] நண்பகல் 12 மணிக்கு யாழ். கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பித்த சகலரும் 1992-01-23 ஆம் திகதி மு. ப. 9-00 மணிக்கு பல்கலைக்கழக சபை அறையில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தற்காலிக - செய்முறை காட்டுநர்**

உடலமைப்பியல்
உடற்றொழிலியல்
சமுதாயமருத்துவம்
மருந்தியல்
சட்டமருத்துவம்
நோயியல்
அறுவைமருத்துவம்
மருத்துவம்
குழந்தை மருத்துவம்
மனநோய்மருத்துவம்.

பதிவாளர்.
யாழ்ப்பாணம் - பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992 - 01 - 20 [[illegible]]

## வைத்திய சேவை

நரம்புத் தளர்ச்சியா? வாதரோகமா? பீனிசமா? தலைமுடி உதிர்கின்றதா? தலைமயிர் நரைக்கின்றதா? குழந்தைகளின் ரோகங்களா? மாதவிடாய்க் கோளாறுகளா? எதுவானாலும் கவலை வேண்டாம். நாடுங்கள்! நலமடையுங்கள்!!

**டாக்டர் த. சிவானந்தன்,**
D. A. M., R. A. M. P. (இலங்கை)
''சிவா வைத்தியசாலை'',
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
[19419]

**O/L** க. பொ. த. [சா. தரம்] (ஆண்டு—11)

★ பகல் முழு நேர வகுப்புகள்
★ சனி - ஞாயிறு வகுப்புகள்
★ மீட்டல் வகுப்புகள்

**ஆரம்பம்: 25 01-92**
[சனி காலை 7. 45 மணி]

**யூனிவேர்சல்**
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

இதை விடத் தெரிவு....... வேறேதும் இல்லை!
[C/1350]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org